SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: உயிருண்ணிப்பத்து**

**திருப்பெருந்துறையில் அருளியது**

*** * * * ***

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***

பைந்நாப்பட அரவுஏர் அல்குல்
உமைபாகம் அதாய்என்
மெய்ந்நாள் தொறும்பிரியா வினைக்கேடா
விடைப்பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த்
திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாள்களித்து எந்நாள் இறுமாக்கேன்
இனியானே.

நான்ஆர் அடிஅணைவான் ஒருநாய்க்குத்
தவிசுஇட்டு இங்கு
ஊன்ஆர் உடல்புகுந்தான் உயிர்
கலந்தான் உளம் பிரியான்
தேனார்சடை முடியான் மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர் வளம்
ஈந்தனன் எனக்கே.

எனைநான் என்பதுஅறியேன்
பகல்இரவுஆவதும் அறியேன்

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

மனவாசகம் கடந்தான் எனை
மத்தோன்மத்தன் ஆக்கிச்
சினமால் விடை உடையான்மன்னு
திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைச் செய்த படிறு
அறியேன் பரஞ் சுடரே.

வினைக்கேடரும் உளரோபிறர்
சொல்லீர் வியன்உலகில்
எனைத்தான் புகுந்து ஆண்டான் எனது
என்பின்புரை உருக்கிப்
பினைத்தான் புகுந்து எல்லே பெருந்துறையில்
உறைபெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான்
மறுமாற்றத்து இடை யானே.

பற்றுஆங்கு அவைஅற்றீர் பற்றும்
பற்றுஆங்கு அதுபற்றி
நற்றுஆம் கதிஅடைவோம் எனின்
கெடுவீர் ஓடிவம்மின்
தெற்றுஆர் சடைமுடியான் மன்னு
திருப்பெருந்துறை இறைசீர்
கற்றுஆங்கு அவன்கழல்
பேணினரொடும் கூடுமின்கலந்தே.

கடலின் திரைஅதுபோல்வரு
கலக்கம் மலம்அறுத்துஎன்
உடலும் எனது உயிரும்புகுந்து
ஒழியாவண்ணம் நிறைந்தான்
சுடரும் சுடர்மதிசூடிய
திருப்பெருந்துறை உறையும்
படரும் சடைமகுடத்து எங்கள்
பரன்தான் செய்த படிறே.

வேண்டேன் புகழ்வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்பு சிவம்
வேண்டார்தமை நாளும்

தீண்டேன் சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம்போகேன் இனிப்
புறம்போகல் ஒட்டேனே.

கோல்தேன் எனக்கு என்கோகுரை
கடல்வாய் அமுதுஎன்கோ
ஆற்றேன் எங்கள் அரனே அருமருந்தே
எனது அரசே
சேற்றார் வயல் புடைசூழ்தரு
திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனி நின்மலனே
உனையானே.

எச்சம் அறிவேன் நான்எனக்கு
இருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனே
அருமருந்தே எனதுஅமுதே
செச்சை மலர்புரை மேனியன்
திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம் என நெஞ்சில்மன்னி
யான்ஆகி நின்றானே.

வான் பாவிய உலகத்தவர்
தவமே செய அவமே
ஊன் பாவிய உடலைச்சுமந்து
அடவி மரம் ஆனேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு
திருப்பெருந்துறை உறைவாய்
நான் பாவியன் ஆனால் உனை
நல்காய் எனலாமே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *